Registered as a Newspaper
பக்கங்கள் 12 விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 93
செவ்வாய்க்கிழமை
27 பெப்ரவரி 2024

## முச்சந்தி முரளி



"என்னடா இது எல்லாம் துறந்த புத்தருக்கு கடல் பிடிக்கேலை, மீன் பிடிக்கேலை எண்டு கதை விடுகினம்?"

மாதகல் - சம்பில்துறையில்

# கடலில் மீன்பிடிப்பது விகாரைக்கு இடையூறாம்

## மீனவர்களை விரட்டும் கடற்படை

**யாழ்ப்பாணம், பெப்ரவரி 27**

**மாதகல், சம்பில்துறை விகாரையின் அழகைக்கெடுப்பதாகவும், அங்கு வரும் சிங்களமக்களுக்கு இடையூறாக இருப்பதாகவும் தெரிவித்து அந்தப் பகுதியில் 41 ஆண்டுகளுக்கு மேலாக தொழில் செய்த மீனவர்களை விரட்டியடித்துள்ளனர் கடற்படையினர். அந்தப் பகுதியில் கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபடவும் அவர்கள் தடைவிதித்துள்ளனர்.** 11



சபாநாயகருக்கு எதிரான

## பிரேரணையைத் தோற்கடிப்போம்

மஹிந்த சூளுரை

கொழும்பு, பெப். 27
சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவுக்கு எதிராக முன்வைக்கப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணையை தோற்கடிப்போம் என்று சிறிலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார். 11

## குடும்பத் தலைவர் அடித்துக் கொலை!

கல்லாற்றில் சம்பவம்

கிளிநொச்சி, பெப். 27
வீட்டில் படுத்திருந்த குடும்பத்தலைவர் மீது நடத்தப்பட்ட 11

## நீர்வெறுப்பு நோயால் இளைஞன் சாவு

யாழ்., பெப். 27
நீர்வெறுப்பு நோயால் இளைஞன் உயிரிழந்துள்ளான்.
ஆவரங்கால் கிழக்கைச் சேர்ந்த பிரதாபன் சாலமன் (வயது - 22) என்ற 11

## பொலிஸ்மா அதிபராக தென்னக்கோன்

கொழும்பு, பெப். 27
மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் மற்றும் பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து டி.எம்.டபிள்யூ.டி. தென்னக்கோன் புதிய பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். 11



## இனத்துவேசம் கக்கிய பொலிஸாருக்கு மறியல்

யாழ்ப்பாணத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், பெப். 27
யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இரண்டு பொலிஸார், மதுபோதையில் பொலிஸ் விடுதிக் 11

தீவிரமடையும் மீனவர் பிரச்சினை

## கடல் எல்லையில் கறுப்புக்கொடிப் போர்!

3ஆம் திகதி நடத்த யாழ்.மீனவர்கள் தீர்மானம்

பக்.11

13 வயதுச் சிறுமியை

## வேலையில் ஈடுபடுத்திய பெற்றோரைக் கைதுசெய்க!


நீதிவான் உத்தரவு

யாழ்ப்பாணம், பெப். 27
கிளிநொச்சி, திருமுறிகண்டியைச் சேர்ந்த 13 வயதுச் சிறுமியை வேலை செய்யப் பணித்த குற்றச்சாட்டில் பெற்றோரைக் கைது செய்யுமாறு யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார். 11

## ஒன்றேகால் கோடி ரூபாவை மோசடி செய்தவர் கைது!

செம்மணியில் சிக்கிய அரசியல்வாதி

யாழ்ப்பாணம், பெப். 27
கனடாவுக்கு அனுப்புவதாகத் தெரிவித்து யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவரிடம் ஒன்றேகால் கோடி ரூபா பணத்தைப் பெற்று தலைமறைவாகியிருந்த மானிப்பாய் பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் வெளிநாட்டுக்குத் தப்பிச் செல்ல முற்பட்ட நிலையில் செம்மணியில் வைத்து நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார். 11



றைனோ சிமெண்ட் ரூப்பிங் ஷீட்
சிறந்த விலைக்கு நீண்ட காலம் பாவிக்கக்கூடிய கூரை
RHINO
60 YEARS
www.rhino.lk
ரூ. 3,955/- இலிருந்து துரித அழைப்பு 0115748728
• இலங்கையின் முதற்தர ரூப்பிங் மற்றும் சீலிங் ஷீட் • 60 வருட நம்பிக்கை

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெப்ரவரியில் டெங்கு குறைவு

கொழும்பு, பெப். 27

பெப்ரவரி மாதத்தில் பதிவாகும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை ஜனவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் குறைந்துள்ளது என்று தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

ஜனவரி மாதம் வரை 60க்கும் மேற்பட்ட டெங்கு அபாய வலயங்கள் காணப்பட்ட நிலையில் தற்போது 24ஆகக் குறைந்துள்ளது. ஜனவரி மாதத்தில் இலங்கையில் 10 ஆயிரத்து 417 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். பெப்ரவரி மாதத்தில் 5 ஆயிரத்து 181 டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை பதிவாகியுள்ளது என்றும் தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது. (ச-இ)

# நாட்டில் வெப்பம் மாணவருக்கு எச்சரிக்கை

**கொழும்பு, பெப்.27**

**அதிக வெப்பமான காலநிலையைக் கருத்தில் கொண்டு பாடசாலை மாணவர்களுக்கு சுகாதார அமைச்சால் சில அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.**

அதிக வெப்பநிலை நிலவும் நாள்களில் விளையாட்டு மைதானத்தில் மாணவர்கள் வெளிப்புற நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதிக வெப்பநிலை நிலவும் நாள்களில் இல்ல விளையாட்டுப்போட்டிகள் மற்றும் பயிற்சிகளை நடத்துவதைத் தவிர்க்க வேண்டும் என்றும், மாணவர்களை அதிகளவில் நீர் அருந்தச் செய்யவேண்டும் என்றும் சுகாதார அமைச்சின் குறித்த அறிவுறுத்தல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் நிலவும் வறட்சியான காலநிலையில் ஓரளவு மாற்றத்தை எதிர்பார்க்கமுடியும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ-இ)

# மீனவர்கள் நலன்பேண புதிய திட்டம் ஆரம்பம்!

கொழும்பு, பெப்.27

மீனவர்களின் ஆரோக்கியம் மற்றும் நலன்புரி செயற்பாடுகளை மேம்படுத்தும் வகையில் 'தீவர சுவ சவிய' என்ற புதிய வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த தெரிவித்துள்ளார்.

இதன் முதற்கட்ட வேலைத்திட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது. நாட்டிலுள்ள அனைத்து மீனவர்களையும் இந்தத் திட்டத்தில் உள்வாங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் அனைத்து மீனவர்களும் முழுமையான மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு மருத்துவச் சான்றிதழ், முதலுதவிப் பயிற்சி என்பன அவர்களுக்கு வழங்கப்படும். (ச-இ)

# இலங்கைக்கான தூதுவர் எலிசபெத் ஹோர்ஸ்ட்!



கொழும்பு, பெப்.27

ஜூலி சங்குக்குப் பின்னர், இலங்கைக்கான புதிய அமெரிக்கத் தூதுவராக அமெரிக்க மூத்த இராஜதந்திரி எலிசபெத் கேத்ரின் ஹோர்ஸ்ட் நியமிக்கப்படவுள்ளார். ஜூலி சங்கின் பதவிக் காலம் விரைவில் முடிவடைந்ததும், ஹோர்ஸ்ட் இலங்கைக்கான புதிய தூதுவராகத் தனது கடமைகளைப் பொறுப்பேற்பார் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஹோர்ஸ்ட் தற்போது பாகிஸ்தானுக்குப் பொறுப்பான முதன்மை துணைச் செயலாளராகவும் துணைச் செயலாளராகவும் உள்ளார்.

இவர் உக்ரைன், ஆப்கானிஸ்தானின் ஜாபுல் மாகாணத்தின் கலாட்டில் உள்ள அமெரிக்க இராணுவ மாகாண மறுசீரமைப்புக் குழு, ரஷ்யா, துஷான்பே, தஜிகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகளிலும் அமெரிக்க இராஜதந்திரியாகப் பணியாற்றியுள்ளார். (எ-இ)

# பொதுச்சுகாதார அதிகாரி சுட்டுப்படுகொலை!

கொழும்பு, பெப். 27

கரந்தெனிய சுகாதார மருத்துவ அதிகாரி பணியக மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் நேற்றுமுன்தினம் காலை எல்பிட்டியவில் உள்ள அவரது வீட்டில் வைத்துச் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் பொருளாளராகவும், பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களின் சட்ட நடவடிக்கைக்கான வழிகாட்டியாகவும் அவர் செயற்பட்டிருந்தார்.

அவர் படுகொலைக்குள்ளாக்கப்பட்டமைக்கு யாழ்ப்பாணம் மாவட்ட பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளது. தாக்குதல் தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (ச-9)

# இலங்கையில் கால்பதிக்கும் ஆஸி. எரிபொருள் நிறுவனம்

கொழும்பு, பெப்.27

யுனைடெட் பெற்றோலியம் அவுஸ்திரேலியா பிரைவேட் லிமிடெட் இலங்கையின் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சுடன் உள்ளூர்ச் சந்தையில் பெற்றோலியப் பொருள்களை வழங்குவதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் சார்பில் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுலக்ஷனா ஜயவர்த்தன மற்றும் யுனைட்டெட் பெற்றோலியம் அவுஸ்திரேலியா சார்பாக அதன் நிறுவனத்தின் உரிமையாளர் என்ற வகையில் எடி ஹேர்ஸ் ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர்.

அவுஸ்திரேலியாவுக்குச் சொந்தமான பெற்றோலிய சில்லறை விற்பனையாளர் மற்றும் இறக்குமதியாளருக்கு இலங்கை முழுவதும் 150 எரிபொருள் நிலையங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. (எ-இ)



# பிரதான ஏற்றுமதிப் பயிராக செவ்விளநீரை மாற்றுங்கள்

## விவசாய அமைச்சர் வலியுறுத்து

கொழும்பு, பெப். 27

இலங்கையின் செவ்விளநீருக்கு உலக சந்தையில் கடும் மவுசு நிலவுவதால் நாடு முழுவதும் செவ்விளநீர் செய்கையை மேற்கொண்டு எதிர்காலத்தில் பிரதான ஏற்றுமதிப் பயிராக செவ்விளநீரை மாற்ற வேண்டும் என்று துறைசார் அதிகாரிகளுக்கு விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர அறிவுறுத்தியுள்ளார்.

ஏற்றுமதியை இலக்காகக் கொண்டு, முருதவெல ருவாவவில் இரண்டாவது செவ்விளநீர்ச் செய்கை கிராம ஆரம்ப நிகழ்வில் பங்கேற்றபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

ஏற்றுமதிக்காக செவ்விளநீரை பயிரிடும் முதல் கிராமம் கடந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டில் செவ்விளநீர் ஏற்றுமதி மூலம் 2 பில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டது. கடந்த வருடம் எதிர்பார்த்த வருமானம் ஆறு பில்லியன் ரூபாவாகும்.

ஐக்கிய அரபு இராச்சியம் உள்ளிட்ட பல நாடுகளில் எமது நாட்டில் உற்பத்தி செய்யப்படும் செவ்விளநீருக்கு அதிக கிராக்கி இருக்கிறது. எதிர்காலத்தில் செவ்விளநீரை உலகில் பிரபலமாக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)



தவக்கால சிந்தனை

# விமர்சனங்களை உயர்வின் படிகளாக்குவோம்

இயேசுவின் மீது அடுக்கடுக்கான விமர்சனங்களை அவரை எதிர்த்தவர்கள் முன்வைத்தபோதும் அவர் சளைத்து முடமாகிப்போகவில்லை. எமது மனதைக் காயப்படுத்தவேண்டும் என்ற நோக்கோடு செயற்படுபவர்கள் எத்தனையோ பேர் உள்ளனர்.

ஒவ்வொரு விமர்சனக் கல்லெறியையும் எதிர்கொள்ளும் யுக்தியை இயேசுவிடமிருந்து கற்றுக்கொள்வோம்.

குடும்ப வாழ்விலும் பொதுப்பணி வாழ்விலும் விமர்சிப்பவர்கள் அழையா விருந்தாளிகளாக வந்து விமர்சனங்களை உபயம் செய்யத்தான் செய்வார்கள்.

என்னை வலுவூட்டுபவரின் துணைகொண்டு என்னால் எதுவும் செய்யமுடியும் என்ற மனநிலையோடு எமது சாட்சிய வாழ்வைத் தொடர்ந்து முன்னெடுப்பதே விமர்சிப்போருக்கு நாம் கொடுக்கும் பதிலாக அமையும்.

**எஸ்.யேசுதாஸ்**, கொழும்புத்துறை

# போராட்டத்தைக் கைவிட்டனர் இராமேஸ்வரம் மீனவர்கள்!

தமிழகத்தின் இராமேஸ்வரம் மீனவர்கள் தங்களின் தொடர் போராட்டத்தைக் கைவிட்டு நேற்று மீன்பிடி நடவடிக்கைகளுக்குத் திரும்பினர் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இலங்கையில் கைதாகியுள்ள இந்திய மீனவர்களை விடுவிக்கக் கோரி இராமேஸ்வரம் மீனவர்கள் கடந்த 17 ஆம் திகதி முதல் காலவரையற்ற பணிப்புறக்கணிப்பையும், கடந்த சனிக்கிழமை முதல் தொடர் உண்ணாவிரதத்தையும் முன்னெடுத்திருந்தனர். இந்தநிலையில், தமிழக சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்ஷா, உண்ணாவிரதத்தில் ஈடுபட்டவர்களுடன் நேற்றுமுன்தினம் மாலை முன்னெடுத்த பேச்சையடுத்து, உண்ணாவிரதம் மற்றும் பணிப்புறக்கணிப்பு என்பன கைவிடப்பட்டுள்ளன. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபாநாயகருக்கு எதிராக அவநம்பிக்கைப் பிரேரணை

**கொழும்பு, பெப்.27**
**சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவுக்கு எதிரான அவநம்பிக்கை பிரேரணையில் ஐக்கிய மக்கள் சக்தி கைச்சாத்திட்டுள்ளது. இந்தப் பிரேரணையை ஐக்கிய மக்கள் சக்தி கொண்டுவரவுள்ளது.**

நிகழ்நிலைக் காப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்ட விதம் மற்றும் அதை சபாநாயகர் சான்றுரைப்படுத்திய விதம் என்பன தொடர்பிலேயே அவருக்கு எதிராக இந்த அவநம்பிக்கை பிரேரணை கொண்டுவரப்படுகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.
நாடாளுமன்ற குழுநிலை விவாதத்தின்போது, அந்தச் சட்டவரைவு தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கிய வியாக்கியானங்கள் மற்றும் பரிந்துரைகளுக்கு மாறாக சட்டமூலத்தின் சில சரத்துகள் நிறைவேற்றப்பட்டன என்று எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடும் ஆட்சேபனைகளைத் தெரிவித்திருந்தனர்.
எனினும் அந்த ஆட்சேபனைகளைத் புறக்கணித்து சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கு ஆளும் கட்சியினருக்கு இடமளித்ததன் மூலம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன அரசமைப்பை மீறியுள்ளார் என்று தெரிவித்து ஐக்கிய மக்கள் சக்தியால் இந்த அவநம்பிக்கை பிரேரணை கொண்டுவரப்பட்டுள்ளது. (எ-44)

# வெள்ளைக் கருத்து ஆடைகளுக்கானதே

## ரஷ்யத் தூதரகம் அறிக்கை

கொழும்பு, பெப். 27
ரஷ்யர்கள் சிலரால் அண்மையில் கொழும்பில் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த விருந்துபசார நிகழ்வொன்றில், 'வெள்ளையர்கள் மட்டும்' என்று காண்பிக்கப்பட்டமை தவறாக அர்த்தம் கொள்ளப்பட்டுவிட்டதாக ரஷ்யத் தூதரகம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.
'வெள்ளையர்கள் மட்டும்' என்ற அடையாளப்படுத்தல் மூலம், 'வெள்ளையர்களுக்கு மட்டுமான' நிகழ்வையே ரஷ்யர்கள் ஒழுங்கமைத்துள்ளனர் என்ற குற்றச்சாட்டு பூதாகரமாக முன்வைக்கப்பட்ட நிலையில், அந்த நிகழ்வில் 'வெள்ளையர்கள் மட்டும்' என்று இனக்குழுமத்தை மையப்படுத்தி அடையாளப்படுத்தவில்லை என்றும் விருந்துபசாரத்தில் கலந்துகொள்பவர்கள் 'வெள்ளை நிற ஆடையுடன்' வரவேண்டும் என்பதே அவ்வாறு காண்பிக்கப்பட்டது என்றும் இலங்கைக்கான ரஷ்யத் தூதரகம் குறிப்பிட்டுள்ளது. (ம-6)

# கொழும்புத் துறைமுகத்தில் அமெரிக்கா அபிவிருத்தி

கொழும்பு, பெப். 27
கொழும்புத் துறைமுகத்தை இந்துசமுத்திரத்தின் கேந்திர மையமாக மாற்றும் நோக்குடன் 550 மில்லியன் டொலர் செலவில் அமெரிக்கா அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கவுள்ளது.
அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் இது தொடர்பில் தெரிவித்துள்ளதாவது:-
கொழும்புத் துறைமுகத்தில் விரைவான அபிவிருத்திப் பணிகளை 550 மில்லியன் டொலர் செலவில் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை அமெரிக்கா முன்னெடுத்துள்ளது. இதன்மூலம் ஏராளமான இலங்கையர்களுக்குத்தொழில் வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்றுள்ளது.
இதேவேளை, அமெரிக்கப் பாதுகாப்பு அதிகாரிகள் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் சகிதம் கொழும்புத் துறைமுகத்தை அண்மையில் பார்வையிட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ம-6)

# யால சரணாலயத்துள் கஞ்சா பயிர்ச்செய்கை

யால வனவிலங்குகள் சரணாலயத்தினுள் கஞ்சா பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
சுற்றுச்சூழல் ஆர்வலரான சுரேந்திரா என்பவர் இந்தக் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளார்.
யால வனவிலங்குக்ள் சரணாலயத்தினுள் அண்மைக்காலமாக கஞ்சாச் செடிகள் வளர்க்கப்படுகின்றன. சுமார் 200 ஏக்கர் நிலப்பரப்பில் 50 தொடக்கம் 60 வரையான கஞ்சாச் செடிகள் இவ்வாறு வளர்க்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக விவசாயக் கூட்டத்தில் தெரிவித்த போதிலும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் சுரேந்திரா சுட்டிக்காட்டியுள்ளார்.
இது தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள அந்தப் பகுதி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, கஞ்சா பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்ட இடங்களை நாம் அடையாளம் கண்டு அழித்தோம். சந்தேகநபர்கள் தேடப்பட்டு வருகின்றனர் என்று தெரிவித்தார். (ம-6)

# சஜித் பிரேமதாஸவே அடுத்த ஜனாதிபதி!

## அடித்துக் கூறுகின்றார் மரிக்கார் எம்.பி.

கொழும்பு, பெப். 27
வரவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவே வெற்றிபெற்று ஜனாதிபதியாவார் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரான எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
'கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி.க்கு நான்கு இலட்சம் வாக்குகளே கிடைத்தன. கோத்தாபய ராஜபக்சவுக்கு கிடைக்கப்பெற்ற வாக்குகளில் 4 இலட்சம் வாக்குகள் வெளிநாடுகளில் இருந்து வந்தவர்களினது வாக்குகளாகும். அவர்கள் மீள வருவார்களா எனத் தெரியவில்லை.
எனவே, 65 இலட்சம் வாக்குகள் என வைத்துக்கொள்வோம், அதில் 20 இலட்சம் வாக்குகளை எடுத்தால்கூட ஜே.வி.பி.யால் 25 இலட்சம் வாக்குகள் என்ற கட்டத்துக்கே செல்லமுடியும். ஐக்கிய மக்கள் சக்திக்கு 5 இலட்சம் வாக்குகள் கிடைத்தால்கூட 60 இலட்சத்தைத் தாண்டிவிடலாம். ஆகவே, எவராலும் சஜித்தை வீழ்த்த முடியாது. அவர்தான் அடுத்த ஜனாதிபதி என்றார். (ம-4)



# புதினம் தெரியுமோ?

**சா**ண் ஏற முழம் சறுக்கினமாதிரித்தான் வீட்டுக்கட்சியின்ர வழக்கு விசயங்கள் போய்க்கொண்டிருக்குது. ஒருபக்கம் வழக்குப் போட்டவையோட கதைச்சு, இணக்கப்பாட்டுக்குப் போற அலுவலும் நடக்குது. ஆனால் வழக்குப் போட்டவை ஒருநிலையில இல்லையாம். ஒவ்வொருக்கா ஒவ்வொரு கதை சொல்லுகினம். முக்கியமா திருகோணமலையில வழக்குப் போட்டவர்தான் இப்பிடி ஒருநேரம் ஒரு கதை எண்டுகினம். எல்லாரும் போய் அவரோட கதைக் கேக்க நல்லபடியாக் கதைப்பாராம். போனவை சொல்லுறதையெல்லாம் கேட்டிட்டு " சரி, வழக்கை வாபஸ் வாங்குறன்" எண்டு தலையாட்டுவாராம். பிறகு "ஒருக்கா இதைப்பற்றி சொல்லிப்போட்டு வாறன்" எண்டிட்டு போனையும் எடுத்துக்கொண்டு அங்கால போட்டு திரும்பி வருவாராம். வந்தவர் முதல் இருந்ததுக்கு எதிர்மாறா நிண்டுகொண்டு "அதெல்லாம் நீங்க சொல்றபடி வாபஸ் வாங்க ஏலாது. 27 ஆம் திகதி தெரிவு செய்த நிர்வாகத்தை அப்பிடியே ஏற்றுக்கொள்ளுறதெண்டு சொன்னாத்தான் வாபஸ் வாங்கலாம். இல்லாட்டி வழக்குத்தான்" எண்டு கொஞ்சம் திமிராக் கதைப்பாராம். பிறகு திரும்ப அவருக்கு முதலில இருந்து எல்லாம் விளங்கப்படுத்த, மெல்ல மெல்ல ஆள் மனம் மாறி "சரி, வாபஸ் வாங்கி றன்" எண்டிட்டு திரும்பவும் போனோட போவாராம். அவர் போனைத் தொட்டாலே வேதாளம் முருங்கை மரத்தில ஏறிட்டுது எண்டு அர்த்தம். போனவர் திரும்ப வந்து "இல்லை , நிபந்தனையில்லாமல் வாபஸ் வாங்க ஏலாது" எண்டு அடம்பிடிப்பாராம்.

அவரோட சமரசம் கதைக்கப்போன ஆக்களுக்கு "என்னடா இது?" எண்டமாதிரிப் போட்டுதாம். "இந்தாளோட கதைக்கிறதைவிட பேசாமல் வழக்காடுறது சுகம் போல" எண்டு சமரசம் கதைக்கப்போனவை தங்களுக்குள்ள கிசுகிசுத்திருக்கினம். அந்தளவுக்கு கடும் வதை. அப்பிடி வதைச்சும் கடைசிமட்டும் ஒரு முடிவுக்கு வரேலை. இப்ப வீட்டுக்கட்சிக்காரரே ஒரு முடிவுக்கு வந்திட்டினம் போல இருக்கு.

" கோர்ட்ஸில போய் , யாப்பில சொல்லப்பட்டதுக்கு மாறாத்தான் சில விசயங்கள் நடந்திருக்கு. ஆனால் அப்ப நிர்வாகம் எங்கட கையில இருக்கேலை. அதால நாங்கள் அதுக்குப் பொறுப்பேற்கேலாது. எண்டாலும் யாப்புப்படிதான் எல்லாம் நடக்க வேணும் எண்டதில நாங்களும் உறுதியா இருக்கிறம். யாப்பின்படி எல்லாம் சரியா நடக்கவேணும் எண்டால், மூலக்கிளையில இருந்து எல்லாத்தையும் கலைச்சு, புதிசா ஆக்களைத் தெரிஞ்ச பிறகு தலைவர் தெரிவையும், நிர்வாகத் தெரிவையும் செய்வம்" எண்டு வீட்டுக்கட்சியில புதிசா தெரிவுசெய்யப்பட்டவை சொல்லப்போயினமாம்.

அப்பிடி மூலக்கிளை, தொகுதிக்கிளை, மாவட்டக்கிளை எண்டு எல்லாத்துக்கும் தெரிவை புதிசா, நீதிமன்றத்தின்ர மேற்பார்வையோட நடத்தினால், சுமந்திரன் தரப்புக்குத்தான் சிக்கல் வருமாம். ஏனெண்டால் எப்பிடியோ சிறீதரனுக்குத்தான் கட்சிக்குள்ள சப்போர்ட் கூட இருக்கெண்டு எல்லாருக்கும் தெரிஞ்சு போட்டுது. அதால புதிசாத் தெரியிற ஆக்களுக்குள்ள அவரின்ர ஆக்கள் தான் கூடுதலா வரச் சான்ஸ் இருக்குது.

அதைவிட இன்னொரு தகவலும் இருக்கு. இப்பிடி யாப்பின்படி கட்சியைச் சீரமைச்சால், இப்ப மாதிரி எலக்சன் நடக்காமலே சிறீதரன் ஏகமனதாத் தெரிவு செய்யபடுவாரெண்டும் சொல்லுப்படுகுது. அப்பிடி ஏகமனதாத் தெரிவு செய்யிறதுக்கு முன்மொழியிறது ஆர் தெரியுமோ? சுமந்திரன் தானாம். இதெல்லாம் காத்துவாக்கில விழுந்த கதையள். உண்மை, பொய் பட்சியறியாது பராபரமே!



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளை ஈ தாக்கம்; விழிப்புணர்வு ஆரம்பம்

**யாழ்ப்பாணம், பெப். 27**

**யாழ்ப்பாணத்தில் தென்னைகள் மற்றும் ஏனைய பயிர்களில் பரவிவரும் வெள்ளை ஈக்களின் தாக்கம் குறித்து விழிப்புணர்வு நடவடிக்கைகள் பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.**

இதுதொடர்பில் அதன் தலைவர் எஸ்.செல்வராசா தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டத்தில் இதன் தாக்கம் அதிகம் ஏற்பட்டுள்ளது.

இந்தஈக்களின்தாக்கம்தென்னையில் மட்டுமல்லாமல், மாதுளை, உளுந்து, பயறு, வாழை போன்றவற்றிலும் பரவும் சாத்தியம் காணப்படுகின்றது.

வெள்ளை ஈக்களின் தாக்கம் தென்னைவள உற்பத்தித் திறனில் வீழ்ச்சியை ஏற்படுத்தும். இதனால் செய்கையாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கும். இந்தத் தாக்கத்தைக் கட்டுப்படுத்த விழிப்புணர்வு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பில் தென்னை அபிவிருத்திச்சபையுடன் கலந்துரையாடவுள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார்.

## சில்லுக்குள் சிக்கிய சேலை! பெண் படுகாயம்

மோட்டார் சைக்கிளில் பின்னாலிருந்து பயணித்த பெண்ணின் சேலை சில்லில் சிக்குண்டதால் அவர் கீழே விழுந்து காயமடைந்துள்ளார். அராலிப்பாலத்துக்கு அண்மையாக நேற்றுக் காலை இச்சம்பவம் இடம்பெற்றது. காயமடைந்த பெண் யாழ். போதனா மருத்துவமனையில்சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

(அ-ஒ-27)

## பாம்பால் தீண்டப்பட்டவர் மருத்துவமனையில்

சாவகச்சேரி, பெப். 27

பாம்பால்தீண்டப்பட்ட குடும்பத்தலைவர் ஒருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தச்சன்தோப்புப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

படுக்கைக்குச் சென்றவரையே பாம்பு தீண்டியது என்று தெரிவிக்கப்படுகிறது. (ம-9)



## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், பெப்.27

நீர்வேலி, அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரச் சிறப்புச் சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் எதிர்வரும் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது.

தேவஸ்தான பிரதம குருக்கள் சிவஶ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்களின் ஆசியுரையும் 'முருக மந்திரம்' என்னும் விடயப்பொருளில் இளஞ்சைவப் புலவர் நித்திய பாபுதரனின் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெற்று அதிலிருந்து அறநெறிப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (ப)

## யாழ்ப்பாணத்தில் நேற்று தமிழ்த் தேசிய எழுச்சிநாள்


யாழ்ப்பாணம், பெப். 27

தமிழ்த்தேசிய எழுச்சிநாள்நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் - கொடிகாமத்தில் உள்ள திருமண மண்டபம் ஒன்றில் உலகத் தாய்மொழி தின ஏற்பாட்டுக் குழுவால் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

நிகழ்வின் ஆரம்பத்தில் மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து மாவீரர் ஒருவரின் தாயாரால் ஈகைச்சுடர் ஏற்றப்பட்டது. தொடர்ச்சியாகத் தமிழ்த் தேசியம் சார்ந்த கருத்தியல்களை உள்ளடக்கிய பல்வேறு உரைகள் நிகழ்த்தப்பட்டன.

நிகழ்வில், தென்கயிலை ஆதீன குரு முதல்வர் தவத்திரு அகத்தியர் அடிகளார், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களான ஈ.சரவணபவன், மாவை சேனாதிராஜா, ஞா.ஶ்ரீநேசன், சீ.யோகேஸ்வரன், பா.அரியநேத்திரன், க.கோடீஸ்வரன், உள்ளூராட்சி மன்ற முன்னாள் உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம-125)



ஆசிரியர் கடிதம்

## நோயாளர்கள் உயிர்களை பணயம் வைத்த அரசியல்!

யாழ்.போதனா மருத்துவமனையின் பொறுப்பான அதிகாரி நோயாளிகளின் உயிரைப் பணயம் வைத்து சுகாதார அமைச்சின் செயலாளரின் பழைய நட்பை உபயோகித்து நிர்வாகம் என்ற போர்வையில் நாடகம் ஆடுகின்றார். இவர் மருத்துவமனையில் கடமை நேரத்தில் பெரும்பாலும் இருப்பதில்லை. இவரது வாகன உல்லாச சவாரி தனது வெளிநாட்டு அடியாட்களுடன் நடைபெறுவது கடந்த பல ஆண்டுகளாகக் கண்கூடு. இதற்கு முறையான செலவீட்டை கீழதிகாரிகளால் காட்டமுடியாது. அண்மையில் அமெரிக்க செல்வந்தரின் புத்தக வெளியீட்டுக்காக, கடமை நேரத்தில் மருத்துவமனை ஊழியர்களை வேலைக்கு அமர்த்தியுள்ளார். அரசமைப்புக்கு முரணாக மாகாணப் பணிப்பாளராகவும் செயற்படுகின்றனர். கேட்பதற்கு யாரும் இல்லை என்ற நிலையிலேயே யாழ்ப்பாண சுகாதாரத் துறையுள்ளது.

யாழ்.போதனா மருத்துவமனையின் அபிவிருத்தி என்று கூறி பணம் வசூலித்தாலும் அதனை முறையற்ற விதத்தில் பயன்படுத்தலும் தமிழருக்குச் செய்யும் ஏமாற்று மோசடியாகும். குறிப்பாக தெல்லிப்பழை மருத்துவமனை மற்றும் மந்திகை மருத்துவமனை என்பன சிறப்பு மருத்துவர்களுடன் மேம்பட வேண்டும்.

சிவப்பு நடா பொறிமுறையில் சத்தியமற்ற அணுகுமுறையில் தான்தோன்றித்தனமாக தனது சொற்களுக்குக் கீழ்ப் படியும் அடிப்படைத் தகுதியற்ற பதவி நியமனங்களை இந்த அதிகாரி மேற்கொள்வது எமது பிரதேச இலவச மருத்துவத்துறைக்குச் சாபக்கேடாகும். மாவட்டச் செயலரும் ஆளுநரும் அவரது தனிப்பட்ட நலன்களுக்கு உதவுவதாலும், நிர்வாக அதிகாரத்தைத் தொடர்ந்து மேற்கொள்ளலும் எமக்குக் கிடைத்த பின்னடைவே.

- *நித்திலன்*

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** வரவும் செலவும் அடுத்தடுத்து வரும். சமாளித்துவிடுவீர்கள். தந்தையின் தேவைகளை பூர்த்தி செய்வீர்கள். குடும்பப் பெரியவர்களுடன் கலந்து பேசி முடிவு எடுங்கள். நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். எதிர்பாராத பணவரவு உண்டாகும்.

**இடபம்:** தேவையான பணம் வந்துசேரும். உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். வியாபாரத்தில் இலாபம் உண்டாகும். மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்புள்ளது. பொறுமை அவசியம்.

**மிதுனம்:** உறவுகளால் ஆதாயம் உண்டாகும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். உற்சாகத்துடன் செயற்படுவீர். தடைகள் நீங்கும்.

**கடகம்:** உற்சாகத்துக்குக் குறைவிருக்காது. வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். காரிய வெற்றி தரும். உத்தியோகத்தில் திருப்தி உண்டு. நிம்மதி உண்டாகும் நாள். வியாபாரத்தில் திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**சிம்மம்:** காரியங்கள் அனுகூலமாகும். செலவுகள் ஏற்பட்டாலும், மகிழ்ச்சியே உண்டாகும். உறவினர்களால் வீட்டில் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. தாயிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**கன்னி:** சோர்வு நீங்கி உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். உறவினர்கள் மூலம் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். வீண் விவாதங்களைத் தவிர்க்கவும்.

**துலாம்:** உறவுகளால் நன்மை ஏற்படும். மகிழ்ச்சி உண்டு. குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு மிகுந்த முக்கியத்துவம் கிடைக்கும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிரச்சினைகள் நீங்கும்.

**விருச்சிகம் :** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். பேசும்போது பொறுமை அவசியம். எதிர்பார்த்த காரியம் முடிவதில் தாமதம் ஏற்படக்கூடும். தாயின் அன்பு ஆறுதலாக இருக்கும். கொடுக்கல் வாங்கலில் கவனம் மிக அவசியம்.

**தனுசு:** உற்சாகமான நாள். மனஉறுதியுடன் செயற்படுவீர்கள். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். காரியம் அனுகூலமாகும். வியாபாரத்தில் விற்பனையும்இலாபமும் அதிகரிக்கும். நன்மைகள் அதிகரிக்கும்.

**மகரம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். அவசியத் தேவைகளுக்காக செலவு செய்ய வேண்டிவரும். சில சங்கடங்கள் ஏற்படலாம். உணவு விஷயத்தில் கவனமாக இருக்கவும். அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சி கைகூடும்.

**கும்பம்:** பிள்ளைகளால் வீட்டில் உற்சாகமும் கலகலப்புமான சூழ்நிலை காணப்படும். சிலருக்கு எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். தாயின் விருப்பத்தை பூர்த்தி செய்வீர்கள். தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**மீனம்:** எதிலும் நிதானமாகச் செயற்படவும். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். வீண்விவாதம் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


# என்று உருப்படும் இந்தநாடு?

ஐக்கிய அரபு இராச்சியம் மத்தியகிழக்கிலுள்ள ஓர் இஸ்லாமிய நாடு. பொதுவாகவே முஸ்லிம்கள் அதீத மத வெறி கொண்டவர்கள் என்ற அபிப்பிராயம் பிற மதத்தவர்கள் மத்தியில் காணப்படுகிறது. இதற்கு அடிப்படைக் காரணம் வேறு எந்த மதத்திலும் இல்லாத அளவு மதத்தை முன்னிலைப்படுத்திய தீவிரவாத அல்லது அடிப்படைவாத இயக்கங்கள் மத்திய கிழக்கில் தோன்றியிருப்பதும், அவர்கள் வன்முறைகளில் ஈடுபடுவதும்தான். ஆனால் அந்த எண்ணப்பாட்டை பொய்ப்பிக்கும் வகையிலான முன்மாதிரியான நடவடிக்கை ஒன்றை ஐக்கிய அரபு இராச்சியம் முன்னெடுத்துள்ளது. இதன்மூலம் முஸ்லிம் மக்களும் மத சகிப்புத்தன்மை கொண்டவர்கள், பிற மதங்களை மதிக்கத் தெரிந்தவர்கள் என்ற உண்மையை அந்த நாடு உலகுக்கு ஒருமுறை ஓங்கிய குரலில் சொல்லியுள்ளது. அப்படி என்னதான் அந்தநாடு செய்துவிட்டது? ஐக்கிய அரபு இராச்சியம், தனது நாட்டில் 27 ஏக்கர் நிலப்பரப்பில் 108 அடி உயரமான இந்துக்கோவில் ஒன்றை அமைத்து, அதனை இந்தியப்பிரதமர் நரேந்திரமோடி மூலம் பெப்ரவரி 14ஆம் திகதி, காதலர் தினத்தன்று திறந்து வைத்துள்ளது. இந்தவிடயமே அந்த நாட்டின் நன்மதிப்பை உலக அரங்கில் ஒரேயடியாக தூக்கி நிறுத்தியிருக்கிறது.

உருவவழிபாடு அல்லது விக்கிரகவழிபாடு என்பன முஸ்லிம்களால் அங்கீகரிக்கப்படாத ஒன்று. அதிலும் மத்திய கிழக்கில் உள்ள இஸ்லாமிய நாடுகள், தூய இஸ்லாமியக் கொள்கையை மிக இறுக்கமாகப் பின்பற்றுபவை. அப்படிப்பட்ட நாடொன்றில், அந்த நாட்டின் உத்தியோகபூர்வ மதக்கொள்கைக்கு எதிரான தன்மைகொண்ட, விக்கிரக வழிபாட்டை முதன்மைப்படுத்தும் இந்துசமயக் கோயிலொன்று அமைக்கப்பட்டமை அனைவரையும் ஆச்சரியப்படுத்தியுள்ளது. 'ஐக்கிய அரபு இராச்சியம் மதப் பன்முகத் தன்மைக்கான அறைகளைத் திறந்து விட்டுள்ளது' என ஊடகவியலாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். இந்தக் கோயில் திறப்பு விழாவின் உச்சகட்ட நிகழ்வாக, ஐக்கிய அரபு இராச்சியத்தின் சகிப்புத்தன்மைக்கும் ஒருமைப்பாட்டுக்குமான அமைச்சர் ஷேக் நஹ்யான் பின் முபராக்கும் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தார்.

இதில் இன்னொரு ஆச்சரியமான விடயம் என்னவென்றால், இஸ்லாமிய நாட்டில் அமைக்கப்பட்ட இந்துக் கோயிலை வடிவமைத்தவர் ஒரு கிறிஸ்தவர். அவருக்குப் பக்கபலமாக, துணைக்கட்டடக் கலைஞர்களாக நின்றவர்கள் புத்த, சமண, யூத மதங்களைச் சேர்ந்தவர்கள். ஆலயத்தின் தூபி ஒரு முஸ்லிம் கட்டடக்கலைஞரால் வடிவமைக்கப் பட்டு அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது. ஆலயக் கும்பாபிஷேகத்துக்கு வந்த பக்தர்களுக்கு முஸ்லிம் வர்த்தகர் ஒருவரால் அன்னதானமும் வழங்கப்பட்டிருந்தது. ஆகமொத்தத்தில் உலகின் அத்தனை மதத்தவர்களினதும் கூட்டிணைப்பின் அடையாளமாக, ஐக்கிய அரபு இராச்சியத்தின் இந்துக் கோயில் மாறியுள்ளது. சுற்றுலாவிகளையும், தொழிலாளர்களையும் உலகின் பல பாகங்களில் இருந்தும் கவர்ந்திழுக்கும் ஓர் உத்தியாகவும் இந்தக் கோயில் பார்க்கப்படுகின்றது. ஏனெனில் சகலரும் இன, மத வேறுபாடின்றி வாழக்கூடிய சூழல் தங்கள் நாட்டில் உண்டு என்று ஐக்கிய அரபு இராச்சியம் இந்தக் கோயில் மூலம் நிரூபித்துள்ளதால், வருங்காலங்களில் அந்த நாட்டுக்கு சுற்றுலாவிகள் இப்போதிருப்பதைக் காட்டிலும் அதிகளவில் படையெடுப்பர். அதுபோலவே தொழிலாளர்களும் அதிகளவில் அங்கு செல்லும் சந்தர்ப்பங்கள் அதிகம். ஒரு கோயிலைக் கட்டியதன் மூலம் தன் பொருளாதாரத்தையும் அந்தநாடு பலமாக்கியுள்ளது.

இந்துக்களின் வழிபாட்டுக்கென ஐக்கிய அரபு இராச்சியம் கோயில் ஒன்றை நிர்மாணித்த சமகாலத்தில், சிறிலங்காவில் பூர்வீகக்குடிகளான இந்துக்களின் அடையாளத்தை அழிக்கும் கைங்கரியத்தில் சிங்களப்பேரினவாதம் ஈடுபட்டிருப்பதை நினைவில் கொள்ளவேண்டியுள்ளது. வெடுக்குநாறிமலை, நீராவியடி, குருந்தூர்மலை, தென்னை மரவாடி, உருத்திரபுரம் என பேரினவாதம் ஏற்கனவே அந்த இடங்களில் இருக்கும் சைவக்கோயில்களை அழித்து, அங்கெல்லாம் புத்தர் சிலைகளையும், விகாரைகளையும் அமைப்பதற்கு, இந்தப் பொருளாதாரப் பேரிடர்க் காலத்திலும் கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கின்றது. மதநல்லிணக்கத்தைக் கைக்கொண்டு மற்றையநாடுகள் பொருளாதாரப் பலத்தைத் தேடுகையில், சிறிலங்காவோ மத வெறியை இன்னும் இறுகப்பற்றிக்கொண்டு, 'கெடுகிறேன் பார், பந்தயம் பிடி' என்று வீம்புக்கு நிற்கின்றது. இந்த மதவெறியே சிறிலங்காவில் இதுவரை கொழுந்து விட்டெரியும் பிரச்சினைகளுக்கெல்லாம் மூலகாரணம். அந்த மதவெறி அடங்கும் போதுதான் இந்த நாடு கொஞ்சமேனும் உருப்படும்.




# கல்விமுறைமையில் விரைவில் மாற்றம்!



## கல்வியமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு,பெப். 27**

**தரம் - 6 க்கு மேல் பாடங்களின் எண்ணிக்கையை எதிர்காலத்தில் ஏழு பாடங்களாகக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.**

வராப்பிட்டியப் பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார்.

மாணவர்கள் வாழும் அந்தந்த மாகாணங்களுக்கு ஏற்ப பூர்வீக கைத்தொழில்களை இணைத்து எஞ்சிய மூன்று பாடங்களையும் கற்கும் வாய்ப்பு வழங்கப்படும்.

மேலும், பாடசாலைகளுக்கு வரும் அனைத்து ஆசிரியர்களும் தகவல் தொழில்நுட்ப அறிவைப் பெற்றிருக்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)

# சட்டபூர்வமாகவே சம்பள உயர்வு

## மத்தியவங்கி தெரிவிப்பு

இலங்கை மத்தியவங்கியின் நிர்வாகசபையின் அங்கீகாரத்துடனும், தொழிற்சங்கங்களுடன் மேற்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையிலுமே தமது ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டது என்று மத்தியவங்கி தெரிவித்துள்ளது.

சம்பள அதிகரிப்புத் தொடர்பில் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விளக்கமளிக்க மத்தியவங்கி தயாராகவுள்ளது என்றும் மத்தியவங்கி குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

# தொழில் வல்லுநர்கள் வெளியேறுகை

வெளிநாடுகளுக்கு வேலைக்காகச் செல்லும் இலங்கையர்களில் 41 வீதமானவர்கள் தொழில் வல்லுநர்கள் அல்லது திறமையானவர்கள் என புலம்பெயர்ந்து செல்லும் இலங்கையர்கள் தொடர்பான அறிக்கையொன்றில் தெரியவந்துள்ளது.


2023ஆம் ஆண்டில் மாதாந்தம் வெளிநாடு செல்வோரின்எண்ணிக்கை 25ஆயிரமாக உயர்ந்துள்ளது என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

# ஒரு லட்சம் மாணவருக்கு புலமைப்பரிசில் திட்டம்!

இலங்கையிலுள்ள 10 ஆயிரத்து 126 பாடசாலைகளை உள்ளடக்கி முதலாம் தரத்திலிருந்து 11 ஆம் தரம் வரையிலான ஒரு இலட்சம் மாணவர்களுக்குப் புலமைப்பரிசில் திட்டம் ஜனாதிபதியால் நடைமுறைப்படுத்தப் படவுள்ளது.

இந்த வேலைத்திட்டத்துக்கு ஜனாதிபதி நிதியத்திலிருந்து 3 ஆயிரத்து 600 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறும் குடும்பங்களின் பிள்ளைகளின் நலன்பேணுவதே இந்த வேலைத்திட்டத்தின் நோக்கமாகும் என்றும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ச-இ)



# 20 % மின்கட்டணத்தை குறைக்கப் பரிந்துரை!

கொழும்பு,பெப். 27

மின்கட்டணத்தை இருபது வீதத்துக்கும்மேல்குறைக்க வேண்டும் என நாடாளுமன்ற மேற்பார்வைக்குழு பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்குப் பரிந்துரை செய்துள்ளது.

தற்போதுள்ள சூழ்நிலையின் அடிப்படையில் மின்கட்டணத்தை 33 வீதத்தால் குறைக்கமுடியும். அதேவேளை துண்டிக்கப்பட்ட பின் மீண்டும் மின் இணைப்பை ஏற்படுத்த அறவிடப்படும் 3 ஆயிரம் ரூபா கட்டணத்தை ஆயிரத்து 500 ரூபாவாகக் குறைக்கவேண்டும் என்றும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. (ச-இ)

## நாளை

28.02.2024

**புதன்கிழமை**

**மாசி–16**

சுபநேரம் : 04.58 -06.28

ராகுகாலம் :12.28 - 01.58

## நாளொரு நல்வார்த்தை

**இன்பம் என்றால் என்னவென்றே பலருக்கும் தெரியாது அது பொன்னால் கிடைப்பதல்ல,புகழால் கிடைப்பதல்ல, தன்னை அறியும் இன்பமே உயர்வானது.**

– ஜெயகாந்தன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாரதிக்குப் பிணை

யாழ்., பெப்.27

பஸ் மிதிபலகையில் இருந்து பயணி ஒருவர் தவறி வீழ்ந்து உயிரிழந்த சம்பவம் தொடர்பில்கைது செய்யப்பட்ட யாழ்ப்பாணம், பருத்தித்துறை வழித்தட தனியார் பஸ் சாரதிக்குப் பிணை வழங்கியுள்ளதுநீதிமன்றம்.

இந்த விபத்துச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை பருத்தித்துறை பிரதான வீதி, நல்லூரில் நடந்தது. இந்தச் சம்பவத்தில் 30 வயதுடைய இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்திருந்தார்.

விபத்துடன் தொடர்புடைய பஸ் சாரதி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு யாழ்ப்பாணம் நீதி வான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

சாரதியை 3 இலட்சம் ரூபா பெறுமதியுடைய இரு ஆள் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதித்தது. இந்த வழக்கு எதிர்வரும் 22ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது என்று யாழ்ப்பாணம் போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்தனர். (எ-23)

### வடமராட்சியில் நடத்தப்பட்ட

# சதுரங்கப் போட்டியில் பெரும் குளறுபடிகள்

### பெற்றோர் விசனம்

**யாழ்ப்பாணம், பெப்.27**

**வடமராட்சி, நெல்லியடியில் உள்ள சதுரங்கக் கழகம் ஒன்றின் அனுசரணையுடன் தனியார் ஒருவர் நடத்திய சதுரங்கப் போட்டி தொடர்பில் பெற்றோர் கடும் விசனம் வெளியிட்டுள்ளனர்.**

போட்டிக்கான அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்கள் இறுதி நேரத்தில் மாற்றப்பட்டிருந்தன என்றும், அதனால் போட்டிகளுக்குத் தயாரான தங்களது பிள்ளைகள் அழுத்தங்களை எதிர்கொண்டனர் என்றும் பெற்றோர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் தெரிவித்துள்ளதாவது:-

இந்தச் சதுரங்கப் போட்டிக்கான விண்ணப்பம் சமூக வலைத்தளக் குழுக்கள் மூலமே கோரப்பட்டிருந்தது. 5 வயதுக்கு உட்பட்டோருக்கான பிரிவு, 7 வயதுப் பிரிவு, 11 வயதுப் பிரிவு, 15 வயதுப் பிரிவு, 15 வயதுக்கு மேற்பட்டோருக்கான பிரிவு என்றவாறு போட்டிகள் நடைபெறும் என்று விண்ணப்பம் கோரப்பட்டிருந்தது. பல மாணவர்கள் இந்த வயதுப்பிரிவின் அடிப்படையில் ஆயிரம் ரூபா செலுத்தி போட்டிக்கு விண்ணப்பித்திருந்தனர்.

போட்டிக்கு இரு நாள்களுக்கு முன்னர் இந்த வயதுப் பிரிவுகளில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டு 11 வயதுக்கு உட்பட்டோர், 11 வயதுக்கு மேற்பட்டோர் என்ற இரு வயதுப் பிரிவுகளிலேயே போட்டி நடைபெறும் என்று சமூக வலைத்தளக் குழுக்களின் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். போட்டிகளுக்கு விண்ணப்பித்தவர்களில் பெரும்பாலானவர்களுக்கு இந்த அறிவிப்புக் கிடைக்கவில்லை. இந்த மாற்றத்தை அறிந்த சிலரும் ஏற்கனவே பணம் செலுத்தியதால் போட்டியிலிருந்து விலகமுடியவில்லை. இந்தக் குளறுபடியான ஏற்பாட்டால் போட்டிகளில் பங்குபற்றிய மாணவர்கள் அழுத்தத்தைச் சந்தித்தனர். எந்தவிதத் தயார்படுத்தலும் இன்றித் தங்களை விடவும் அதிக வயதுடையவர்களுடன் போட்டிகளில் பங்கேற்க நேர்ந்தது.

இந்தச் சதுரங்கப் போட்டி வருமானத்தை மட்டுமே இலக்காகக் கொண்டு நடத்தப்பட்டுள்ளது. சரியான ஒழுங்கமைப்பு எதுவும் இல்லை. போட்டிக்குத் தங்கள் பிள்ளைகளை அழைத்து வந்தவர்கள் தங்கி நிற்கக்கூட இடமில்லை என்று தெரிவித்தனர். (எ-இ)

## சிக்கிய இராட்சத சுறா மீளக்கடலில் விடுவிப்பு



யாழ்ப்பாணம், பெப். 27

வடமராட்சியில் மீனவர்களது வலையில் சிக்கிய 3 ஆயிரத்து 700 கிலோ எடைகொண்ட இராட்சத சுறா மீன் ஒன்று கடற்படையினரது அறிவுறுத்தலுக்கமைய மீளவும் கடலில் விடப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு உடுத்துறையைச் சேர்ந்த மீனவர் ஒருவரின் வலையிலேயே இந்த இராட்சத சுறா சிக்கியது.

இதையடுத்து மேலுமொரு படகு உதவிக்கு வரவழைக்கப்பட்டு 2 படகுகள் மூலம் கரைக்கு சுறாமீன் இழுத்துவரப்பட்டது.

இந்தச் சுறா மீன் உயிருடன் காணப்பட்டதையடுத்து கடற்படையினரது அறிவுறுத்தலுக்கமைய மீளவும் ஆழ்கடலில் மீனவர்களால் விடப்பட்டது. (ச-100-27-66)

## மாணவர் கௌரவிப்பும் வாசல் வளைவு திறப்பும்

யாழ்ப்பாணம், பெப். 27

வரணி மத்திய கல்லூரியின் பரிசில் நிகழ்வும் புதிதாக அமைக்கப்பட்ட பாடசாலையின் வாசல் வளைவு திறப்பு விழாவும் நேற்று திங்கட்கிழமை பாடசாலையின் பிரதான மண்டபத்தில் அதிபர் ஆ.தங்கவேலு தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் சி.சிறிசற்குணராஜா, சிறப்பு விருந்தினராக பழைய மாணவரும் கிழக்கு மாகாண திறைசேரி பிரதம கணக்காளருமான த.சிவசெந்திநாதன், பழைய மாணவர்களான க.சிறிமோகனரஞ்சன் , இ.சிறீரஞ்சன் ஆகியோர் கலந்து கொண்டனர்

இதன்போது பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான மாணவர்கள் பதக்கம் அணிவித்துக் கௌரவிக்கப்பட்டனர் . (ச-159)

## சைகை மொழியை கற்பதும் அவசியம்

### வடமாகாணப் பிரதித் தபால்மா அதிபர் தெரிவிப்பு

மொழிகளை விரும்பிக் கற்கவேண்டும். ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளைக் கற்பதைப் போன்று சைகை மொழியையும் ஒவ்வொருவரும் கற்கவேண்டும் - இவ்வாறு வடமாகாணப் பிரதித் தபால்மா அதிபர் திருமதி மதுமதி வசந்தகுமார் தெரிவித்தார்.

செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் 42ஆவது ஆண்டு நிறைவும், வருடாந்தப் பொதுக்கூட்டமும் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. அந்தநிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது தேவைகளுக்காக சிங்களமொழியையும், ஆங்கிலமொழியையும் கற்றுக்கொள்கின்றோம். அதேபோன்று சைகை மொழியையும் அனைவரும் கற்றுக்கொள்ள வேண்டும். மனதில் இடமிருந்தால் அது மிகவும் இலகுவானது.

அமெரிக்காவில் சைகை மொழி என்பது சாதாரண மொழி. அது அந்தச் சமூகத்தின் வெற்றி. செவிப்புலனற்றவர்கள் நினைப்பதை அதிகாரிகளாலும், உத்தியோகத்தர்களாலும் நூறு வீதம் விளங்கிக் கொள்ள முடிவதில்லை. சைகை மொழியை அறிந்திருப்பதன் மூலம் இந்த இடைவெளியைக் குறைக்கலாம்.

செவிப்புலனற்றவர்களிடம் கூடிய திறன் காணப்படுகிறது. அந்தத் திறன்களை மேலும் வளர்த்துக் கொள்ளவேண்டும். மாற்றுத்திறனாளிகளை வலுப்படுத்துவதற்கு வடமாகாணத்தில் சமூக சேவைகள் திணைக்களம் பல திட்டங்களைச் செயற்படுத்துகின்றது - என்றார். (எ-66)

## சகோதரர்கள் இடையே மோதல்; இருவர் சிகிச்சையில்

யாழ்., பெப்.27

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் கத்தி வெட்டுக்கு இலக்காகி யாழ்ப்பாணம்போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சகோதரர்களுக்கு இடையே ஏற்பட்ட முரண்பாடு கைகலப்பாக மாறியுள்ளது. அதைத் தடுப்பதற்கு 18 வயதான சகோதரி முயன்றுள்ளார். சகோதரர்களில் ஒருவர் சகோதரிக்கும், சகோதரருக்கும் கத்தியால் குத்தியுள்ளார். காயமடைந்த இருவரும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சந்தேகநபர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-125)

## குருபூசையும் சொற்பொழிவும்

பன்னாலை திருவருள்மிகு சிவபூதராயர் ஆலயப் பிரதான மண்டபத்தில் வாராந்த பெரிய புராணச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் எதிர்வரும் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சேக்கிழார் பெருமானின் குருபூஜையும், "திருநீற்றையே செல்வமாகக் கொண்டுசிவனடி பேணி வாழ்ந்த நாயனார் " என்னும் விடயப்பொருளில் சைவப்புலவர் செ. த. குமரனின் சொற்பொழிவும் இடம்பெற்று அதிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ப)

## கச்சதீவில் இம்முறை முறைப்பாடு இல்லை

யாழ்ப்பாணம், பெப்.27

கச்சதீவுத் திருவிழாவில் இந்தமுறை எந்த முறைப்பாடுகளும் பதிவு செய்யப்படவில்லை என்று நெடுந்தீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.


கடந்த வருடம் திருட்டு போன்ற முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டிருந்தன. ஆயினும் இம்முறை எவ்வித முறைப்பாடுகளும் பதிவு செய்யப்படவில்லை. கடந்த ஐந்துவருடங்களில் இம்முறையே முறைப்பாடுகள் செய்யப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-125)

## இரத்த சுத்திகரிப்புப் பிரிவு சிகிச்சைகள் நிறுத்தம்!

குருநாகல் போதனா மருத்துவமனையின் இரத்த சுத்திகரிப்பு சிகிச்சைப் பிரிவு மூடப்பட்டுள்ளது. குருநாகல் போதனா மருத்துவமனையின் இரத்த சுத்திகரிப்பு சிகிச்சைப் பிரிவில் அடுத்தடுத்து இடம்பெற்ற மரணங்களைத் தொடர்ந்தே இரத்த சுத்திகரிப்பு நிலையம் மூடப்பட் டுள்ளது.

இந்த மரணங்களுக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. இரத்த சுத்திகரிப்புச் சிகிச்சைப் பிரிவுக்குத் தேவையான இரசாயனங்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டமையே மரணங்களுக்குக் காரணம் என தொழில்நுட்பவியலாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்த மரணங்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கு சுகாதார அமைச்சு குழுவொன்றை நியமித்துள்ளது. (எ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காஸாப் போரைக் கண்டித்து அமெ. சிப்பாய் தீக்குளிப்பு



**வொஷிங்டன், பெப். 27**
**காஸாப் போரில் இஸ்ரேல் மற்றும் அமெரிக்க அரசுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், அமெரிக்க சிப்பாய் ஒருவர் தீக்குளித்துள்ளார்.**

வொஷிங்டனில் உள்ள இஸ்ரேலியத் தூதரகத்துக்கு முன்பாக அவர் தனக்குத் தானே தீமூட்டிக் கொண்டார் என்று அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அவரில் பரவிய தீ மிகவிரைவாக அணைக்கப்பட்டு அவர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவர் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

காஸாவில் இஸ்ரேல் மேற்கொள்ளும் இனப்படுகொலைகளுக்கு அமெரிக்கா துணை போகின்றது. அந்த இனப் படுகொலைகளின் ஓர் அங்கமாக இருக்க நான் விரும்பவில்லை. சுதந்திர பலஸ்தீனம் மலர வேண்டும் என்று கோஷமிட்டபடி அவர் தனக்குத்தானே தீமூட்டும் வீடியோக்கள் சமூக வலைத்தளங்களிலும் சர்வதேச ஊடகங்களிலும் வெளியாகி பரபரப்பாகியுள்ளன. (ம)

இந்தியா – மாலைதீவு

## ஆய்வுக் கப்பலால் உறவில் பதற்றம்!

மாலே, ஏப். 27
இந்தியாவின் கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் சர்ச்சைக்குரிய சீன ஆராய்ச்சிக் கப்பல் மாலைத்தீவில் நங்கூரமிட்டுள்ளது.

சீனாவின் ஆய்வுக் கப்பலொன்று மாலைதீவின் தலைநகர் மாலேக்கு அருகிலுள்ள திலாபுஷி துறைமுகத்தில் நங்கூரமிட்டு ஆய்வுப் பணிகளை முன்னெடுக்கத் திட்டமிட்டிருந்தது. இதற்குப் பிராந்தியப் பாதுகாப்பைக் காரணமாகக் குறிப்பிட்டு இந்தியா கடும் எதிர்ப்பை வெளியிட்டது. எனினும், இந்தியாவின் எதிர்ப்பைக் கண்டுகொள்ளாமல் சீனக் கப்பலின் ஆய்வுப் பணிகளுக்கு மாலைதீவு அனுமதி வழங்கியுள்ளது.

மாலைதீவின் ஜனாதிபதி மொய்சு சீன ஆதரவாளர் என்பதுடன் இந்திய எதிர்ப்பு நிலைப்பாட்டை உடையவர். இவர் இந்தியாவுடன் மாலைதீவு கொண்டுள்ள உறவை முற்றாகத் துண்டிக்கும் நடவடிக்கையில் அண்மைக்காலமாக ஈடுபட்டுள்ளார். இதன் உச்சக்கட்டமாக மாலைதீவில் முகாமிட்டுள்ள இந்திய இராணுவத்தினரை மே மாதத்துக்குள் வெளியேறுமாறு உத்தரவிட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)

## உக்ரைனை ஆதரிப்போம்

*ஐரோப்பிய ஒன்றியம் தெரிவிப்பு*

கீவ், பெப். 27
ரஷ்யாவின் தாக்குதல்களிலிருந்து முற்றாக விடுதலைபெறும் வரையில் உக்ரைனுக்கான ஆதரவு தொடரும் என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர் வென் டிர் லையென் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவுக்கு எதிரான போரில் அண்மைக் காலமாக உக்ரைன் பின்னடைவைச் சந்தித்துள்ள நிலையில், ஐரோப்பிய ஒன்றியத் தலைவரின் இந்த அறிவிப்பு பரபரப்பாகியுள்ளதுடன் சர்வதேச ஊடகங்களிலும் பேசுபொருள் ஆகியுள்ளது. (ம)

## நவால்னியின் உடல் ஒப்படைப்பு



மொஸ்கோ, பெப். 27
ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் அலெக்சி நவால்னியின் உடல் அவரது தாயாரிடம் நேற்றுமுன்தினம் ஒப்படைக்கப்பட் டுள்ளது.


ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவரும் புடினின் அரசியல் எதிரியுமாக அறியப்பட்டவர் அலெக்சி நவால்னிக்கு நீதிமன்ற அவமதிப்பு, அறக்கட்டளை மூலமாக முறைகேடாக பணம் பெற்றமை, தீவிரவாதத்தைத் தூண்டுதல் மற்றும் நிதியளித்தல், சட்டவிரோத தன்னார்வத் தொண்டு நிறுவனத்தை உருவாக்குதல், நாஜிக் கொள்கைகளுக்குப் புத்துயிர் கொடுத்தல் மற்றும் ஆபத்தான செயல்களுக்கு குழந்தைகளைத் தூண்டுதல் உள்ளிட்ட பல்வேறு வழக்குகளில் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டு 30 ஆண்டுகள் அவருக்குச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. ரஷ்யாவின் கார்ப் நகரத்தில் உள்ள ஆர்க்டிக் சிறையில் அடைக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த 16ஆம் திகதி திடீரென மயங்கி வீழ்ந்து நவால்னி உயிரிழந்தார். நவால்னியின் குடும்பத்தினர், நவால்னி நலமாகவே இருந்தார் என்றும் புடின் அவரைக் கொன்றுவிட்டார் எனவும் குற்றஞ்சாட்டினார்கள். இதை மெய்ப்பிக்கும் வகையில் நவால்னியின் சடலத்தை அவருடைய குடும்பத்தினரிடம் ஒப்படைப்பதில் ரஷ்ய அரசு பின்னடித்து வந்தது.


இந்த நிலையிலேயே நவால்னியின் சடலம் நேற்றுமுன்தினம் அவருடைய குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம)

## ஸ்பெய்னில் தீவிபத்து; 9 பேர் பரிதாபச்சாவு!

மட்ரிட், பெப். 27
ஸ்பெய்ன் நாட்டின் மூன்றாவது பெரிய நகரமான வலேன்சியா பகுதியிலுள்ள அடுக்குமாடிக் குடியிருப்பில் ஏற்பட்ட தீ விபத்துக் காரணமாக ஒன்பது பேர் உயிரிழந்துள்ளனர்.

200க்கும் மேற்பட்ட தீயணைப்புப் படையினர் இணைந்து தீயைக் கட்டுக்குள் கொண்டுவந்தனர். (ம)





## அமைதிக்காக மன்றாடுகிறேன்

வத்திக்கான், பெப். 27
ரஷ்யா – உக்ரைன் மோதலுக்கு அமைதியான முறையில் தீர்வைக் காணவேண்டும். இதை மன்றாட்டமாகக் கேட்கின்றேன் என்று பாப்பரசர் பிரான்ஸிஸ் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் நேட்டோவில் இணைவதற்கு எதிராக ரஷ்யாவால் ஆரம்பிக்கப்பட்ட இராணுவ நடவடிக்கை இரண்டு ஆண்டுகள் கடந்துள்ள போதிலும் இன்னமும் முற்றுப்பெறவில்லை. இதைமுன்னிட்டே போர் நிறுத்தம் தொடர்பான தனது வலியுறுத்தலை பாப்பரசர் பிரான்ஸிஸ் முன்வைத்துள்ளார்.

நீண்டகாலமாக இடம்பெற்றுக் கொண்டிருக்கும் இந்தப் போரில் பல்லாயிரம் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். சர்வதேச அளவில் வெறுப்புணர்வையும் அச்சத்தையும் உருவாக்கியுள்ளது. நியாயமான மற்றும் நீடித்த அமைதியைத் தேடும் இராஜதந்திர சூழ்நிலையை உருவாக்குவதற்காக சிறிதளவு மனிதநேயத்துக்காக நான் கெஞ்சுகின்றேன். மன்றாட்டமாக என் கோரிக்கையை முன்வைக்கின்றேன் என்றும் பாப்பரசர் பிரான்ஸிஸ் மேலும் தெரிவித்தார். (ம)

## சீதா, அக்பர் சர்ச்சை: பெயரை மாற்றவும்

**நீதிமன்றம் விநோதத் தீர்ப்பு**

புதுடில்லி, பெப். 27
இந்தியாவில் சிலிகுரி மிருகக்காட்சிச் சாலையில் அடைக்கப்பட்டுள்ள சீதா, அக்பர் என்ற இரு சிங்கங்களின் பெயர்களையும் மாற்றுமாறு கொல்கத்தா உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வங்க மாநிலம் சிலிகுரியிலுள்ள பெங்கால் மிருகக்காட்சிசாலையில் இரண்டு சிங்கங்களுக்கு 'அக்பர்', 'சீதா' என்று பெயர்சூட்டப்பட்டு ஒரே கூண்டில் அடைக்கப்பட்டன.

இது இந்து மதத்தை அவமதிக்கும் செயல் என்று தெரிவித்து விஸ்வ ஹிந்து பரிஷத் என்ற இந்து அமைப்பு உயர்நீதிமன்றத்தை நாடியது.

மனுவில், அக்பர் புகழ்பெற்ற முகலாய பேரரசர்களில் ஒருவர். சீதா வால்மீகியின் இராமாயணத்தில் ஒருபாத்திரம். இந்து மத வழக்கங்களில் சீதை தெய்வமாக கொண்டாடப்படுகிறார். 'அக்பர்' உடன் 'சீதா'வை தங்க வைப்பது இந்து மதத்தை அவமதிக்கும்செயலென்றுகுறிப்பிடப்பட்டது.

அதனையடுத்து சர்ச்சைகளைத் தவிர்க்க இரண்டு சிங்கங்களின் பெயர்களை மாற்றுங்கள் என்று நீதிமன்று உத்தரவு பிறப்பித்தது. (ச-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மூச்சுவிடச் சிரமப்பட்ட கனடாவாசி உயிரிழப்பு

யாழ்ப்பாணம், பெப். 27
மூச்சுவிடுவதற்கு சிரமப்பட்ட நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

மாதகலில் வசித்த சோதிலிங்கம் கந்தசாமி (வயது - 65) என்பவரே உயிரிழந்துள்ளார்.

கனடாவில் வசித்த அவர் சிலதினங்களுக்கு முன்னர் மாதகலிலுள்ள உறவினர் வீட்டுக்கு வருகை தந்துள்ளார். நேற்று திடீரென மூச்சுவிடுவதற்கு சிரமமான நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அங்கு அவர் உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

(ஓ-27-125)

## காணி விற்பனைக்கு

கண்டி வீதி, சாவகச்சேரி நுணாவில்
பேச்சி அம்மன் கோவிலடியில்
இருந்து 300 m தூரத்தில் 10 பரப்பு
காணி விற்பனைக்குண்டு.

**077 224 7902**

## வேலைவாய்ப்பு

யாழ். நகரில் அமைந்துள்ள **ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்** (புத்தக சாலை) மற்றும் **சமுத்திரா ரேடர்ஸ் (Hardwere)** ஆகிய நிறுவனங்களுக்கான **வேலை வாய்ப்பு.**
**ஆண், பெண்** இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
தொடர்புகளுக்கு:-
**077 494 9683, 077 077 6469**

(CS/54144) J-1

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான
முறையில் அழகாக
மாபிள் பதித்துத் தரப்படும்.
**ஒரு சதுர அடி - 100.00 ரூபாய்**

**077 334 1281**

## துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரியின் ஆசிரியை **திருமதி வி. தேவகி** அவர்களின் பாசமிகு தந்தையார்

**கணபதி சுந்தரலிங்கம்**

அவர்கள் கடந்த 12.02.2024 அன்று காலமானார். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் வட்டம், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.**

## நாளாந்த உடை தேங்காய் ஏல விற்பனை

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவிலின் உயர்திருவிழாக் காலம் தவிர்ந்த ஏனைய நாட்களில் ஆலயத்தில் உடைக்கப்படுகின்ற உடை தேங்காய்கள் 2024.03.02 ஆம் திகதி காலை 10.00 மணியளவில் பகிரங்க ஏலத்தில் விடப்படவுள்ளது. எனவே ஆர்வமுள்ளவர்கள் கலந்து கொள்ளலாம்.

**நிபந்தனைகள்.**

1. தாங்களே உடை தேங்காய்களை உரிய இடத்திலிருந்து அப்புறப்படுத்த வேண்டும்.
2. ஏலத்தின் மூலம் தெரிவு செய்யப்படுபவர் மொத்த தொகையில் 1/3 வீதத்தினை அன்றைய தினமே செலுத்த வேண்டும்.
3. ஏலமானது உயர்திருவிழாக்காலம் தவிர்ந்ததாக அமையும்.

(CR 41885) V-1

திரு.ந.மோகனரூபன்
செயலாளர்
அறங்காவலர் சபை
ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில்
நயினாதீவு.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 30 • 06 • 1937



மறைவு 10 • 03 • 2023

**புவனேஸ்வரி செல்லத்துரை**

**திதி: மாசி மாத அபரபட்ச கிருத்திகை**

பூவுலகில் வாழ்வாங்கு வாழ்ந்து
இறைவனடி சேர்ந்து தெய்வம் ஆகிவிட்ட
எமதருமை பாசமிகு அன்னையே!
ஆண்டு ஒன்று உருண்டோடி விட்டாலும்
எம்மனதில் ஆழமாக உறைந்திருக்கும் அன்னையே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
ஆண்டவனை என்றும் பிரார்த்திக்கின்றோம்.

**29 - 5/1, 36 ஆம் ஒழுங்கை,**
**கொழும்பு - 06**

**உங்கள் பிரிவால் வாடும்**
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை.**

(CS 54126) (N-1)

## மரண அறிவித்தல்

தோற்றம் 22 • 12 • 1955



மறைவு 26 • 02 • 2024

**பரமநாதன் கிருஸ்ணகுமார்**

காரைநகர் அறுகம்புலத்தைப் பிறப்பிடமாகவும் 56/1, 5 ஆம் ஒழுங்கை, சம்பியன் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட பரமநாதன் கிருஸ்ணகுமார் நேற்று (26.02.2024) திங்கட்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரமநாதன் - மகாலட்சுமி (கல்கமுவா) தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், கோசலா, மாதவி ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிருஸ்ணதாசன், காலஞ்சென்றவர்களான சாந்தகுமாரி, மீனகுமாரி மற்றும் விஜயகுமாரி, கிருஸ்ணரூபன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.02.2024) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**56/1, 5 ஆம் ஒழுங்கை,**
**சம்பியன் வீதி,**
**கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.** (CS 54145) (N-1)

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 676 8096**
**076 393 1412**

## மரண அறிவித்தல்

தோற்றம் 09 • 01 • 1944



மறைவு 25 • 02 • 2024

**யோசேப் பெனடிக்ற் இராசதுரை**

**(ஓய்வு பெற்ற முன்னாள் இ.போ.ச சாரதி)**

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட யோசேப் பெனடிக்ற் இராசதுரை அவர்கள் கடந்த (25.02.2024) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பேபி வசந்தாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வரப்பிரகாசம் யோசேப் - அருளம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற அல்பிரட் தம்பியையா மற்றும் கென்றிக் தம்பிரட்ணம், தங்கராணி, யோகராணி, மாதினி ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற ஆசீர்வாதம் - மரியம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்றவர்களான இராசநாயகம், மரியதாஸ் மற்றும் லில்லிபுஸ்பம் திரவியநாதன், மதுரநாயகம் கொனி, திகழ்மதி, சோமசுந்தரம், காலஞ்சென்றவர்களான அமலதாஸ், லக்ஸ்மிகாந்தன் ஆகியோரின் மைத்துனரும், ராஜ்மோகன், வசந்தராணி (UK), இராஜகோபால், கமலராணி, ராஜ்குமார் (UK) ஆகியோரின் அன்புத் தந்தையும், ரதினி, சுதாகரன், யஸ்மின், ஜெயாகரன், ரஜிதா ஆகியோரின் மாமனாரும், ரம்யா, ரேணுஜன், றொக்சியா, ஸ்ரீபன், ஜோனார்த்தன், ஸ்ரனி, ரேபேக்கா, ராகுல், லவினா, றாக்கி, அஜந்தா, அவந்திகா, அபிஷேக், கென்றிக், ஜெறிஸ் சட்விக், ரெஜினா, ரிகானா, ஆதவுன் றிஸ்வின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (27.02.2024) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 03 .00 மணியளவில் உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, பின்னர் புனித மிக்கேல் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS 29372) S-1

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாசிமக பௌர்ணமி தினத்தை முன்னிட்டு, இன்பர் சிட்டி கடற்கரையில் தீர்த்தவாரி நிகழ்வு கடந்த சனிக் கிழமை இடம்பெற்றது. (ப-100)



தென்மராட்சிப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் வரணிப் பிரதேச மாண வர்களுக்கான ஓவியப் பயிற்சிப் பட்டறை வரணி மத்திய கலாசார மண்ட பத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் ஓவியப்பாட ஆசிரியர் சிவானந்தராஜா, வரணிப் பிரதேசத்தைச் சேர்ந்த ஐந்து சிறுவர் சமூக அமைப்புகளின் சிறுவர்கள் ஆகியோர் கலந்துகொண் டனர். (ப-9-159)

வடமராட்சி செல்வச்சந்நிதியான் ஆச் சிரம முதல்வர் கலாநிதி மோகன தாஸ் சுவாமிக்கு தமிழ்நாடு ஏ.பி.ஜே. அறக்கட்டளை மிகச் சிறந்த ஆன்மீ கத்துக்கான விருதுவழங்கிக் கௌர வித்துள்ளது. இந்த நிகழ்வு கொழும் பிலுள்ள தனியார் விடுதியொன்றில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் நாடாளு மன்ற உறுப்பினர் மனோ கணேசன், ஏ.பி.ஜே. அறக்கட்டளை நிர்வாகிகள், உறுப்பினர்கள், மூத்த அறிவிப்பா ளர் அப்துல் ஹமீத் உட்படப் பலர் பங்கேற்றனர். (ச-27-66)





கொக்குவில் சனசமூக நிலை யத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவு பவள விழாவை முன் னிட்டு, சனசமூக நிலையத்தில் புதிதாக அமைக்கப்பட்ட நுழை வாசல் முன்மண்டபத்தின் திறப்பு விழா கடந்த சனிக்கி ழமை நடைபெற்றது. (ப-66)

நயினாதீவு, தம்பகைப்பதி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் சமேத ஸ்ரீ வீரபத்தி ரப்பெருமான் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை சிறப்பாக இடம்பெற்றது. (ப-66)





யாழ். ஊரெழு கணேச வித்தியாசாலையில் ஊரெழு நண்பர்கள் அமைப்பின் உதவியுடன் ஊரெழு அபிவிருத்திச் சங்[illegible]ால் புனரமைக்கப்பட்ட பிரதான மண் டபத்தின் திறப்பு விழா கடந்த வியாழக்[illegible]மை இடம்பெற்றது. (ப-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரிகளின் தொலைபேசிகள்; இயங்கும் ஆனால் இயங்காது

## ஆய்வில் வெளிவந்த விநோதத் தகவல்

கொழும்பு, பெப். 27

**அரச அதிகாரிகள் 49 சதவீதமானவர்களின் தொலைபேசி இலக்கங்கள் செயற்படாத நிலையில் உள்ளமை, பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களத்தால் நாடு முழுவதையும் உள்ளடக்கியவகையில் முன்னெடுக்கப்பட்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.**

நாட்டின் ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் கடமையாற்றும் கிராம அலுவலர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பிரதேச செயலகத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களைக் கருத்தில் கொண்டு இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது.

ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட 589 தொலைபேசி இலக்கங்களில் 286 இலக்கங்கள், அதாவது 49 சதவீதமான இலக்கங்கள் செயற்படாத இலக்கங்கள் என்று தெரியவந்துள்ளது. 22 சதவீதமான தொலைபேசி இலக்கங்கள் செயற்பாட்டில் இருக்கும்போதும் பதிலளிக்கப்படவில்லை. அழைப்புகளுக்கு பதிலளிக்கும் சதவீதம் 29 சதவீதம் எனத் தெரியவந்துள்ளது.

மேலும், 98 உள்ளூராட்சிசபைகள், 23 மாநகரசபைகள் மற்றும் 36 நகரசபைகளின் நிலையான தொலைபேசி இலக்கங்களும் இந்த ஆய்வுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. (அ-ஒ-இ)

## தவறான முடிவெடுத்து இளைஞன் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், பெப். 27

தவறான முடிவு எடுத்த 31 வயதான இளைஞரொருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மானிப்பாயில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தின் பணிப்பின் பிரகாரம் வலிகாமம் கிழக்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் விசாரணையை மேற்கொண்டு, உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்கு உத்தரவிட்டார். யாழ் போதனா மருத்துவமனை சட்ட மருத்துவ அதிகாரியின் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (அ-ஒ-159)

## சடலம் மீட்பு

கொடிகாமம், பெப். 27

தவறான முடிவு எடுத்து உயிரிழந்த குடும்பத் தலைவரின் சடலம் கிணற்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

கொடிகாமத்தில் நேற்றுத் திங்கட்கிழமை அதிகாலை 3 மணிக்கு இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

இரவு படுக்கைக்குச் சென்றவரை அதிகாலை மூன்று மணிக்கு எழும்பி பார்த்த போது காணவில்லை என குடும்பத்தினர் தேடியுள்ளனர். அப்போதே அவர் சடலமாக கிணற்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளார்.

கொடிகாமம் பொலிஸார், சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்ததையடுத்து நீதிவான் பணிப்பின் பிரகாரம் தென்மராட்சி பிரதேச கொடிகாமம் பிரிவு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சி. தவமலர் விசாரணையை மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிட்டார். யாழ். போதனா மருத்துவமனை சட்ட மருத்துவ அதிகாரியின் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (அ-ஒ-159)

## பரிசில் நிகழ்வு



யாழ்ப்பாணம், பெப்.27

வரணி மத்திய கல்லூரியின் பரிசில் நாள் நிகழ்வு, புதிதாக அமைக்கப்பட்ட பாடசாலையின் வாசல் வளைவு திறப்பு விழா மற்றும் வருடாந்த வருணி சஞ்சிகை வெளியீடு என்பன பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நேற்றுத் திங்கட்கிழமை நடைபெற்றது.

அதிபர் ஆ. தங்கவேலு தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் சி. சிறீசற்குணராஜா, பழைய மாணவரும் கிழக்கு மாகாண திறைசேரி பிரதம கணக்காளருமான த. சிவசெந்திநாதன், பழைய மாணவர்களான க. சிறீமோகனரஞ்சன் மற்றும் இ. சிறீரஞ்சன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ப-159)

## தொலைபேசிக் கம்பம் சுழிபுரத்தில் சேதம்

யாழ்ப்பாணம், பெப். 27

சுழிபுரத்தில் நெல்வெட்டும் இயந்திரம் மோதி தொலைபேசிக் கம்பம் நேற்று சேதமடைந்துள்ளது.

சுழிபுரம் மேற்கிலுள்ள நெல்வயற்பரப்பில் அறுவடையைத் தொடர்ந்து மீள பிரதான வீதியை நோக்கிப் பயணித்த நெல்வெட்டும் இயந்திரம் தொலைபேசிக் கம்பத்துடன் மோதிய நிலையில் கம்பம் சரிந்து இயந்திரத்தின் மீது வீழ்ந்துள்ளது.

தெய்வாதீனமாக எவருக்கும் காயம் ஏற்படாத நிலையில், கம்பத்தை அகற்றிய பின் வாகனம் பயணத்தைத் தொடர்ந்தது. (அ-ஒ-125)



சுன்னாகம் பொதுநூலக டிஜிற்றல் அறிவு மையத்தில் பார்வையற்ற தனிநபர்களின் டிஜிற்றல் தேவைகளைப் பூர்த்திசெய்யும், நவீன கருவியின் சேவை நேற்றுத் திங்கட்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பொதுநூலகத்தின் பிரதம நூலகர் திருமதி ஜெயலட்சுமி சுதர்சன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வலிகாமம் தெற்குப் பிரதேசசபையின் செயலாளர் திருமதி உ. சாரதா, தமிழ்நாட்டைச் சேர்ந்த விசேட தேவையுடையவர்களுக்கான தொழில் நுட்ப ஆலோசகர் சு. சங்கர், புத்தாக்க நிறுவனத்தின் பிரதம செயற்பாட்டு உத்தியோகத்தர் சி. சபேசன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ப-66)


## மரண அறிவித்தல்

### திருமதி கந்தசாமி தங்கம்மா



பிறப்பு 10.04.1939 இறப்பு 26.02.2024

வரணி இயற்றாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி தங்கம்மா அவர்கள் 26.02.2024 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தையா-பாறுபதிப் பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பொன்னையா சிவக்கொழுந்து தம்பதியினரின் மருமகளும் திரு மு. விவேகானந்தம், திருமதி இராசநாயகம், இராசம்மா மற்றும் மு. அருளானந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 27.02.2024 செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக குடமியன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

வரணி, இயற்றாலை
077 220 8176

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வீடு எரிந்து நாசம்:
# 8 இலட்சம் ரூபா பணமும் கருகியது

புத்தூர் மேற்கு வளர்மதியில் அண்ணாமலை மகேந்திரனின் வீடு நேற்று இரவு 8 மணியளவில் தீக்கிரையாகியுள்ளது. வீட்டில் யாரும் இல்லாத நேரம் தீ பரவியுள்ளது. சம்பவ இடத்துக்கு வந்த யாழ். மாநகரசபையின் தீயணைப்புப் படையினர் தீயைக் கட்டுப்படுத்த முயன்றபோதும் வீடு முழுவதுமாக எரிந்துள்ளது. கூலி வேலை செய்து காணி வாங்குவதற்காக நீண்ட காலம் சேமித்த 8 இலட்சம் ரூபா பணமும் தீயில் எரிந்துள்ளது. மின்சார ஒழுக்கால் இந்தத் தீ விபத்து ஏற்பட்டிருக்கக்கூடும் எனச் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. (ஒ-23)

## கடலில்...

சம்பில்துறை சங்கமித்தா விகாரையின் பின்பக்கமாகவுள்ள கடற்பரப்பில் சுழிபுரம் மத்தி மற்றும் காட்டுப்புலம் தொழிலாளர்கள் தலைமுறை தலைமுறையாக மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களது தொழில் நடவடிக்கையால் விகாரைக்கு இடையூறு எனத் தெரிவித்து 2013ஆம் ஆண்டு கடற்படையினர் தடைவிதித்திருந்தனர். அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கு மீனவர்கள் இதுகுறித்து முறையிட்டதையடுத்து கடற்றொழிலில் ஈடுபட அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் அந்தப் பகுதிக்கு புதிய கடற்படைப் பொறுப்பதிகாரி தற்போது நியமிக்கப்பட்டுள்ளார். விகாரைக்கு வருகை தரும் சிங்கள மக்கள், கடற்றொழில் நடவடிக்கை விகாரையின் அழகைக் கெடுப்பதாகவும் இடையூறாகவும் இருப்பதாகக் கூறுவதால், சம்பில்துறை சிவன் ஆலயத்துக்குப் பின்புறமாக தொழிலில் ஈடுபட்ட கடற்றொழிலாளர்களின் வலைகளையும் களங்கட்டி தடிகளையும் உடனடியாக அகற்றவேண்டும் என கடந்தவாரம் புதிய கடற்படைப் பொறுப்பதிகாரி பணித்துள்ளார்.

இவற்றைப் பிடுங்கி மீள நடுவதற்கு பெரும் செலவாகும் என்பதையும், விகாரைக்கும் கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபடும் இடத்துக்கும் இடையில் ஆகக் குறைந்தது 300 மீற்றர் இடைவெளியாவது இருக்கும் எனவும் கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர். எனினும் அதை ஏற்றுக்கொள்ளாத கடற்படைப் பொறுப்பதிகாரி அவற்றை அகற்றியே தீரவேண்டும் என பிடிவாதம் பிடித்துள்ளார். விகாரையிலிருந்து பார்க்கும்போது கடற்றொழில் நடவடிக்கை தெரியாத இடத்தில் தொழில் செய்யுமாறு கூறியுள்ளார்.

கடற்றொழிலாளர்கள் கடற்படையினர் அடையாளப்படுத்திய இடத்தில் தொழிலை மேற்கொண்ட நிலையில், சிவன் ஆலயத்துக்கு அண்மையாக நேற்றுமுன்தினம் வலையை வீசி மீனவர் தொழிலை மேற்கொண்டபோது, அங்கு விரைந்த கடற்படையினர் அந்தப் பகுதியிலும் தொழில் செய்யவேண்டாம் எனக் கலைத்துள்ளனர். "உயிர்களைக் கொலை செய்து தொழில் செய்கிறீர்கள். இங்கு தொழில் செய்ய முடியாது" என்று அவர்கள் கூறியுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் பிரதேச கடற்றொழில் பரிசோதகருக்கு மீனவர்கள் தெரியப்படுத்தியுள்ளனர். "கடற்றொழில் செய்யும் இடம் தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்கு திணைக்கள ரீதியாக உயர் அதிகாரிகள் உள்ளனர். அவர்கள் ஊடாகவே நீங்கள் (கடற்படையினர்) செயற்படமுடியும். மீனவர்கள் இந்த இடத்தில் தொழில் செய்யக் கூடாது என்று கடற்படை முடிவெடுக்க முடியாது" என்று கடற்றொழில் பரிசோதகர் குறிப்பிட்டதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

இருப்பினும் 10 நாள்களுக்கு அந்தப் பிரதேசத்திலிருந்து கடற்றொழில் நடவடிக்கை முழுமையாக அகற்றப்பட வேண்டும் என கடற்படையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

இதேவேளை - யாழ். மாவட்டக் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது;

அந்தப் பகுதியில் விகாரையைச் சூழவுள்ள இடத்தில் கடற்றொழில் மேற்கொள்ள எந்தத் தடையும் திணைக்கள ரீதியாக இல்லை - என்றார்.

இதேவேளை- தென்னிலங்கையில் பல இடங்களில் விகாரையை அண்மித்து கடற்றொழில் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-125)

## கடல்...

இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்து கறுப்புக்கொடிப் போராட்டம் எதிர்வரும் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, யாழ்ப்பாண மாவட்டக் கடற்பகுதிகளில் இடம்பெறும் என யாழ். மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனத் தலைவர் சிறி கந்தவேள் புனிதப் பிரகாஷ் தெரிவித்தார்.

யாழ். மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சமாசத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எல்லைதாண்டிய இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்து கடலில் கறுப்புக்கொடிகளைத் தாங்கி துக்கத்தை வெளிப்படுத்தவுள்ளோம்.

நாம் எமது கடலில் மீன் பிடிப்பதற்கு இந்திய அரசாங்கத்தை கேட்கவேண்டிய தேவை இல்லை. எமது கடலை இந்திய மீனவர்களுக்குத் தாரைவார்த்துக் கொடுக்கவும் முடியாது. எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் சிலர் இலங்கைச் சிறையில் உள்ள நிலையில் அவர்களை விடுவிக்குமாறு இந்திய அரசு அழுத்தம் வழங்கி வருகிறது. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். எமது கடல் எமக்கே சொந்தம். கடலை யாருக்கும் தாரைவார்க்க முடியாது.

இதனை வலியுறுத்தி கடலில் கறுப்புக் கொடி ஏந்திப்போராடவுள்ளோம். நமது போராட்டத்தை இலங்கைக் கடல் எல்லை வரை தொடரவுள்ளோம் - என்றார். (அ-ஒ-27-66)

## வேலையில்...

திருமுறிகண்டியைச் சேர்ந்த 13 வயதுச் சிறுமி தினமும் அங்கிருந்து பி.ப. 1.30 மணியளவில் பேருந்தில் ஏறி யாழ்ப்பாண நகருக்கு வருவார். யாழ். நகரில் உணவுப் பொருள்களை விற்பனை செய்துவிட்டு இரவு 8 மணியளவில் பேருந்தில் மீண்டும் கிளிநொச்சிக்குச் செல்வார். இந்த நிலையில் இவர் விற்பனை செய்யும் உணவுப் பொருள்கள் காலாவதியாக இருந்ததுடன், தனியாக இவர் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டமை கண்டறியப்பட்டு யாழ்ப்பாணப் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

நீதிவான் நீதிமன்றில் நேற்றுமுற்படுத்தப்பட்ட நிலையில் பெற்றோரைக் கைது செய்யுமாறு நீதிவான் பணித்துள்ளார். (அ-ஒ-5)

## நீர்வெறுப்பு...



இளைஞனே நேற்று உயிரிழந்துள்ளான்.

இளைஞனுக்கு மூச்சுவிடுவதில் சிரமம் ஏற்பட்டதையடுத்து அச்சுவேலிப் பிரதேச மருத்துவமனைக்குச் சென்றுள்ளார். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். இந்த நிலையில் அவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

ஏதோ ஒன்றின் கடிக்கு இலக்காகி அவர் அதற்கு சிகிச்சை பெறாமல் இருந்தமையால் நீர்வெறுப்பு நோய்க்கு உள்ளாகியுள்ளமை தெரியவந்துள்ளது.

இறப்பு விசாரணைகளை வலி. கிழக்கு பிரதேச திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (அ-ஒ-23-26-125)

## குடும்பத்...

தாக்குதலில் காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த அவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாற்றைச் சேர்ந்த நடராசா ரவிக்குமார் (வயது - 44) என்ற 3 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 20ஆம் திகதி வீட்டில் படுத்திருந்தபோது அவர் மீது கொட்டன் ஒன்றால் முகம் மற்றும் தலைப்பகுதியில் கடுமையான தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து அவர் கிளிநொச்சி மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டு அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தார். இந்த நிலையில் நேற்றுமுன்தினம் அவர் உயிரிழந்துள்ளார். தாக்குதல் நடத்திய சந்தேகநபர் தலைமறைவாகியுள்ளாரெனத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-ஒ-113)

## இனத்துவேசம்...

குள் நுழைந்து குழப்பம் விளைவித்தமை மற்றும் பொலிஸாரின் கட்டளைகளை மீறிய குற்றச்சாட்டில் இருவாரங்களுக்கு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதுடன், மூத்த பொலிஸ் அத்தியட்சகரால் இருவாரங்களுக்குப் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த இரண்டு பொலிஸார் நேற்றுமுன்தினம் இரவு மதுபோதையில் பொலிஸ் விடுதிக்குள் நுழைந்துள்ளனர். அங்கு இனத்துவேச வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டு பொலிஸ் உயரதிகாரியை அவர்கள் திட்டியுள்ளனர்.

இதனையடுத்தே அவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (அ-ஒ-5-23-26)

## பிரேரணையைத்...

மொட்டுக் கட்சி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர், ஐக்கிய மக்கள் சக்தியால் சபாநாயகருக்கு எதிராகக் கொண்டுவரப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த மஹிந்த ராஜபக்ச, சபாநாயகருக்கு ஆதரவாக நாம் செயற்படுவோம். நம்பிக்கையில்லாப் பிரேரணையை நிச்சயம் தோற்கடிப்போம் என்று கூறினார். (அ-ஒ-44)

## பொலிஸ்மா...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைவாக இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து ஜனாதிபதியின் செயலர் சமன் ஏக்நாயக்கவால், தேசபந்து தென்னக்கோனிடம் நியமனக் கடிதம் நேற்று பிற்பகல் வழங்கப்பட்டது. (அ-ஒ-26)

## ஒன்றேகால்...

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவரிடம் 2022 ஆம் ஆண்டுக்கும் 2023 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் பல கட்டமாக மேற்படி அரசியல்வாதி ஒரு கோடியே 25 இலட்சம் ரூபா பணத்தைப் பெற்றுள்ளார். அதன் பின்னர் தொடர்பைத் துண்டித்த அவர் தலைமறைவாகியுள்ளார்.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் அவரது வீட்டுக்குச் சென்றுள்ளார். வெளிநாட்டுக்குச் செல்வதற்காக கொழும்பு நோக்கி நேற்று இரவு சொகுசுப் பேருந்தில் பயணித்துக்கொண்டிருந்தபோது செம்மணியில் வைத்து யாழ். மாவட்ட சிறப்புக் குற்ற விசாரணைப் பொறுப்பதிகாரி குணறோஜன் தலைமையிலான குழுவினரால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். (அ-ஒ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறால்கூட்டுக்கே தடை மீன்பிடிக்குத் தடையில்லை



## கடற்படைப் பேச்சாளர் இப்படிக் கூறுகிறார்

**யாழ்ப்பாணம், பெப். 27**

**மாதகல் சம்பில்துறை விகாரைக்குப் பின்பாகவுள்ள கடற்பிரதேசத்தில் மீன்பிடி நடவடிக்கைக்குத் தடை விதிக்கப்படவில்லை எனக் கடற்படைப் பேச்சாளர் கப்டன் கயன் விக்கிரமசூரிய, 'உதயன் பத்திரிகைக்குத்' தெரிவித்தார்.**

சம்பில்துறை விகாரையைச் சூழவுள்ள கடற்பிரதேசத்தில் கடற்றொழில் நடவடிக்கையை முன்னெடுக்க கடற்படையினரால் தடைவிதிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் அந்தப் பகுதி மீனவர்களால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பில் கேட்டபோதே மேற்கண்டவாறு பதிலளித்தார்.

"அந்தப் பிரதேசத்தில் இறால் கூடுகளை அமைப்பதற்கு கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தாலேயே தடை விதிக்கப்பட்டுள்ளது. அதுவும் அனுமதி பெறப்படாத கூடுகளுக்கே தடைவிதிக்கப்பட்டுள்ளது. அனுமதி பெற்றுச் செய்பவர்களுக்குத் தடையில்லை. மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு எந்தவொரு தடையுமில்லை. இந்த விவகாரம் மீனவர்களுக்கும், கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்துக்கும் உரியதே தவிர கடற்படையினருக்குரியதல்ல'' என்று அவர் பதிலளித்தார். (ஒ-125)

# யாழில் களைகட்டுகிறது வைக்கோல் வியாபாரம்!

யாழ்ப்பாணம், பெப். 27

யாழ். குடாநாட்டில் வைக்கோலுக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது. பெரும்போக நெற்செய்கைக்கான அறுவடை தற்போது நடைபெற்று வருகின்றது.

இந்த நிலையில் ஒரு லோட் வைக்கோல் 10 ஆயிரம் ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகின்றது என்று கால்நடை வளர்ப்போர் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை வன்னியிலிருந்தும் கூடுதலான வைக்கோல் யாழ்ப்பாணம் எடுத்துவரப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-17)

# ஐ.ம.ச. கூட்டத்தில் சரத் பொன்சேகா!

கொழும்பு, பெப்.27

கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட தரப்பினருக்கு எதிராக வழக்குத் தொடுத்துள்ள பொன்சேகா, ஐக்கிய மக்கள் சக்தி கூட்டத்தில் பங்கேற்ற சம்பவம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

கம்பஹா மாவட்டம், மஹர பகுதியில் ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றுள்ளது. இந்தக் கூட்டத்துக்கு பொன்சேகாவுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை எனத் தெரியவருகின்றது. எனினும், அவர் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றுள்ளார். அவர் முன்வரிசையில் அமர்ந்திருந்தாலும் உரையாற்றுவதற்கு அவருக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை.

இந்தக் கூட்டத்தில் பொன்சேகா பங்கேற்றதற்கு ஐ.ம.ச. செயற்பாட்டாளர்கள் சிலர் அதிருப்தி வெளியிட்டுள்ளனர். ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் பதவியில் இருந்து தன்னை நீக்குவதற்கு நீதிமன்றம் ஊடாகத் தடை உத்தரவை பொன்சேகா பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-44)

# ஆசிரியர் கலாசாலையில் திருவள்ளுவர் குருபூசை

யாழ்ப்பாணம், பெப். 27

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் திருவள்ளுவர் குருபூசை தினம் கலாசாலையின் முன்றிலிலுள்ள திருவள்ளுவர் சிலைக்கு முன்பாக கடந்த 6 ஆம் திகதி கலாசாலையின் அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் திருவள்ளுவர் சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டதுடன் திருவள்ளுவர் குறித்தும் திருக்குறள் குறித்தும் ஆசிரிய மாணவர்களின் சிற்றுரைகள் இடம்பெற்றன. (ச)





# திடீரெனத் தீப்பற்றிய வாகனத்தால் பரபரப்பு

யாழ்ப்பாணம், பெப்.27

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் சிறியரக கார் ஒன்று நேற்றுத் திடீரெனத் தீப்பிடித்தால் பரபரப்பு ஏற்பட்டது.

யாழ். மத்திய பஸ் நிலையத்துக்கு அண்மையில் உள்ள வெற்றுக் காணியொன்றினுள் நிறுத்தி விட்டு அருகில் உள்ள வங்கிக்குச் சென்றிருந்தபோதே வாகனம் திடீரெனத் தீப்பிடித்துள்ளது.

யாழ்ப்பாணம் மாநகரசபை தீயணைப்புப் பிரிவுக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து, சம்பவ இடத்துக்குச் சென்ற தீயணைப்புப் பிரிவினர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். ஆயினும் வாகனம் முற்றாகச் சேதமடைந்தது. இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (எ-66,20)

# விற்பனைக் கண்காட்சி!

வடமராட்சிக் கிழக்குப் பிரதேச செயலகத்தில் வடமாகாண தொழிற்றுறைத் திணைக்களத்தின் அனுசரணையில் விற்பனைக் கண்காட்சி, வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலாளர் கு.பிரபாகரமூர்த்தி தலைமையில் நேற்றுத் திங்கட்கிழமை ஆரம்பமானது. (ப-27)




## கட்டில் தேவை

பழங்கால கைவண்ணத்திலுள்ள 5 - 6 அடிக்கு இடைப்பட்ட அகலத்தில் கட்டில் வைத்திருப்பவர்கள் தொடர்பு கொள்ளவும்.

குறிப்பு:- கருங்காலிக் கட்டிலாக இருப்பின் நன்று.

தொடர்பு:- 077 120 9998



## பாவித்த கட்டுமான உபகரணங்கள் விற்பனைக்கு

- இடம் :- வவுனியா
- பொருட்கள் :- ரம்பிங் றம்மர், வெல்டிங் மெசின், ஜெனரேட்டர், தூண் பெட்டி, GI பைப், கிறைண்டர், கில்றி, பவர் சோ, மரப்பலகைகள் மற்றும் சிறிய பொருட்கள்.

தொடர்பு:- 074 358 4434

## விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி வசதிகள்

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show money) வசதிகள்.

தொடர்புகளுக்கு 074 173 7684


# கொழும்புத்துறையில் 2 டெங்கு நோயாளர்கள்

யாழ்ப்பாணம், பெப். 27

கொழும்புத்துறைப் பிரதேசத்தில் இரண்டு டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கொழும்புத்துறை வளன்புரம், புங்கன்குளம் ஆகிய இடங்களிலேயே அவர்கள் இனங்காணப்பட்டனர்.

இந்தப் பகுதிகளில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் நுளம்புகளை விரட்ட புகையூட்டும் பணிகளும் இடம்பெற்று வருகின்றன என்றும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (ச-17)


## ஆசிரியர் தேவை

O/L இந்த வருடம் பரீட்சைக்கு தோற்றும் மாணவிக்கு விஞ்ஞான பாட முக்கிய பகுதி, வினாவிடை வகுப்புக்கள் கற்பிப்பதற்கு விஞ்ஞான பாட ஆசிரியர் தேவை.

077 675 1649

## வேலையாள் தேவை

யாழ். நகரில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் பதவிகளுக்கு வேலையாட்கள் தேவை.

1. பண வசூலிப்பாளர்
2. எழுதுவினைஞர் - (இரவு) பகுதிநேரம் பி.ப 6.00 - 11.30 மணிவரை

தகுதியுடையோர் தொடர்புகொள்ளவும்.

077 120 9972


செய்தி : 021 463 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.02.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org